**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 250/2019**

**வா.சா.2 – பழனிசாமி**

**20–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன். அம்மாசை நாடாரை 5 வருடமாக தெரியும். நான் சொல்லும் உயில் யாருக்கு எழுதப்பட்டது என்றால் தெரியாது. பத்தர எழுத்தர் படித்து காண்பித்த பிறகு அம்மாசை நாடார் கையெழுத்து போட்டார். உயில் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். ஆனால் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அம்மாசை நாடாருக்கு உயிலை படித்துக்ககாண்பித்தபோது நானும் உயிலின் வாசகத்தை கேட்டேன். அம்மாசை நாடாருக்கு பத்திர எழுத்தர் உயிலை படித்து காண்பித்தார். நான் எனது முதல் விசாரணையில் பத்திர எழுத்தர் படித்து காண்பித்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

2. பொதுவாக ஒரு உயில் சாசனம் எழுதி பதிவு செய்தபிறகு மற்றோரு உயில் சாசனம் எழுதினால் ஏற்கனவே எழுதப்பட்ட உயில் சாசனம் ரத்தாகிவிடும் என்பது தெரியாது. 05.07.2011ல் அம்மாசை நாடார் கோமதி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் தெரியாது. 05.07.2011ம் தேதியிட்ட உயில் பற்றி எனக்கு நன்கு தெரிந்தும் உயில் பற்றி தெரியாது என்று பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அனைத்து விபரமும் தெரிந்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.20 11:14:31 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.